# <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 17.03.2026

அசல் வழக்கு எண். 220/2022

வா.சா. 1 – நேரு , த/பெ. ராமகிருஷ்ணன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

## <u>குறுக்கு விசாரணை</u>

நீங்கள் என்னவாக பணிபுரிகிறீர்கள் என்றால் வழக்கறிஞராக பணிபுரிகிறேன். 2021 காலகட்டத்தில் என்னவாக பணிபுரிந்தீர்கள் என்றால் நீதித்துறையில் சுருக்கு எழுத்ததாக பணியாற்றினேன். இந்த வழக்கு யார் தாக்கல் செய்தார்கள் என்றால் என்னுடைய அம்மா தாக்கல் செய்தார். எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் பிரதிவாதி அடமானம் வைத்திருந்தார் அடமானத்திற்கு உண்டான பணத்தை திருப்பி கொடுக்கவில்லை ஆகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடமானத் தொகை எவ்வளவு என்றால் ரூ.2,50,000/– ஆகும். உங்கள் அம்மாவுக்கு தான் தெரியும் உங்களுக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் எனக்கு நேரடியாக தெரியும். பணம் கொடுத்த காலகட்டத்தில் நீங்கள் எந்த ஊரில் பணி புரிந்தீர்கள் காஞ்சிபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பணிபுரிந்தேன் . மேற்படி தொகை மட்டுமல்லாமல் வேறு ஏதேனும் பண பரிவர்த்தனை இருந்ததா என்றால் இருந்தது. என்ன பரிவர்த்தனை இருந்தது என்றால் முன்பாகவும் பின்பாகவும் பணத்தை பெற்றுள்ள அவர் கூறியபடி திரும்பவும் செலுத்தி உள்ளார். அவ்வாறு செலுத்தி விட்டதால் அந்த ஆவணங்கள் என்னிடம் இல்லை. கடன் அடமான பத்திரம் தவிர வேறு ஆவணங்கள் உங்களிடம் இருக்கிறதா என்றால் இல்லை. கடன் அடமான பத்திரம் எப்பொழுது பதிவு செய்யப்பட்டது என்றால் கடந்த 28.12.2017 அன்று பதிவு செய்யப்பட்டது

தாமல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. நீங்கள் அங்கு சென்றீர்களா என்றால் நான் சார்பதிவாளர் அலுவலகம் செல்லவில்லை கையொப்பமும் போடவில்லை. அடமானத் தொகை எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் 25.12.2017 அன்று ரூ.1,50,000/– கொடுத்தார்கள் 28.12.2017 அன்று ரூ.1,00,000/– கொடுத்தார்கள். பணம் எப்பொழுது கொடுத்தார்கள் என்றால் காலை சுமார் 9மணி அளவில் கொடுத்தார்கள். மேற்படி தொகை கொடுத்த பிறகு கடந்த 1.06.2018 அன்று பிரதிவாதி வாதிக்கு ரூ.1,50,000/– கொடுத்தார்கள் என்றால் தெரியும் அது வேறு ஒரு பரிவர்த்தனை ஆகும். அது காசோலையாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான் அந்த காசோலை எண் 537101 என்றால் இருக்கலாம். அந்த காசோலை மாற்றி உங்கள் அம்மா பணம் எடுத்துக்கொண்டார் என்றால் எடுத்துக்கொண்டார். வாங்கிய கடன் ரூ.2,50,000/–ல் ரூ.1,50,000/– கொடுத்துவிட்டார் பாக்கி தொகை ரூ.1,00,000/– மட்டுமே கொடுக்க வேண்டும் என்றால் சரியில்லை. உங்கள் அம்மாவுக்கு தெரியாமல் நீங்கள் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினீர்கள் என்றால் சரியில்லை. பாக்கி உள்ள ரூ.1,00,000/–ற்கு உங்கள் தாயாரிடம் மாதம் தோறும் வட்டி ரூ.3,000/– கொடுத்து வந்தார் என்றால் சரியில்லை. பாக்கி தொகை ரூ.1,00,000/– மட்டுமே கொடுக்க வேண்டும் என்றால் சரியில்லை. மாறாக அதிகமாக பணம் கேட்கிறீர்கள் என்றால் சரியில்லை. பிரதிவாதியை ஏமாற்ற வேண்டி வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. நீங்கள் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பிறகு பிரதிவாதி உங்கள் தாயாரை சந்தித்து ரூ.1,00,000/– மட்டுமே கொடுக்க வேண்டும் என்று கூறிய பொழுது சரி அந்த பணம் கொடுத்தால் போதும் என்று

உங்கள் தாயார் கூறினார் என்றால் சரியில்லை ஆகவே தான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலும் சரி இல்லை. பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சரியில்லை. கடன் பத்திரம் வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram